வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 06.02.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 37 பக்கங்கள் : 08

## ‘ஸ்மார்ட் போர்ட்’டுக்கு பெற்றோரிடம் பாடசாலைகள் பணம் சேர்க்கக்கூடாது

### பிரதமர் ஹரிணி அறிவிப்பு

கொழும்பு, பெப். 06



இந்த ஆண்டு ஆயிரத்து 500 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் போர்ட் வழங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஸ்மார்ட் போர்ட்களுக்காக பெற்றோரிடம் பணம் சேகரிக்கும் நடவடிக்கையை நிறுத்துங்கள் என்று கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் எதிர்க்கட்சி தலைவரின் கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலவச கல்வி குறித்து எதிர்க்கட்சித் தலைவர் அக்கறை கொண்டுள்ளதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் கடந்த காலங்களில் இவ்வாறான கொள்கையை கொண்டிருக்கவில்லை. தற்போது மாற்றமடைந்துள்ளதையிட்டு அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக வலைத்தளங்களில் வெளியாகும் போலிச் செய்திகள் மற்றும் வதந்திகளுக்கு முன்னுரிமை

07

# புலிகளை வென்றது பற்றிப்பேச ஜனாதிபதிக்கு தைரியமில்லை!

## நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்



கொழும்பு, பெப். 06

“விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ வீரர்களின் போர் வெற்றியைப் பற்றிப் பேச ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு தைரியம் இல்லை”, - இவ்வாறு சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தனது உரையில்,

“உலக நாடுகள் தங்கள் சுதந்திர தினங்களில் படைப் பிரிவுகள் மற்றும் பிரிவுகளின் வெற்றிகளைப் பற்றி பெருமையாகப் பேசுகின்றன. முதல் மற்றும் இரண்டாம் உலகப் போரின் வெற்றிகள்கூட பேசப்படுகின்றன. டித்வா சூறாவளியின் போது ஆயுதப் படைகளின் பங்களிப்பு பற்றி ஜனாதிபதி பேசினார். ஆனால், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வீரர்களின் வெற்றிகளை பற்றிப் பேச அவருக்கு தைரியம் இல்லை.

நாங்கள் தமிழ் மக்களுடன் போர் புரியவில்லை. உலகமே அஞ்சிய பயங்கர வாதத்தையே முப்படையினரின் உதவியுடன் தோற்கடித்தோம். சுதந்திர தினத்தன்று இந்த வெற்றியைப் பெருமையாகக் கூற நாட்டின்

07

## ரில்வின் தலைமையிலான குழு நேற்று இந்தியா பயணமானது!



கொழும்பு, பெப். 06

ஆளும் தேசிய மக்கள் சக்தியின் தாய்க் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே. வி. பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா உள்ளிட்ட குழுவினர் நேற்று இந்தியா

07

## ஜனாதிபதி அநுர குமார இந்தியா பயணமாகிறார்

கொழும்பு, பெப். 06

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இந்த மாத நடுப்பகுதியில் இந்தியா செல்லவுள்ளார். புதுடில்லியில் நடைபெறவுள்ள “செயற்கை நுண்ணறிவு தாக்க” உச்சி மாநாட்டில் பங்கேற்கவே அவர் இந்தியா செல்கிறார்.

இந்த மாநாடு எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை புதுடில்லியில் நடைபெறுகிறது. செயற்கை நுண்ணறிவு தொடர்பில் மிகப்பெரியளவில் நடைபெறும் இந்த மாநாட்டில் 100 நாடுகளை சேர்ந்த அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள்,

07

## பிரான்ஸில் தமிழர் வெட்டிக்கொலை

பாரிஸ், பெப். 06

பிரான்ஸில் இடம் பெற்ற வாள்வெட்டில் ஈழத்தமிழ் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் படுகாயமடைந் துள்ளார்.

பிரான்ஸில் ஈழத் தமிழ் மக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் ஒன்றான பொபினியில் கடந்த 2ஆம் திகதி இரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குழு ஒன்று தமிழ் இளைஞர்கள் இருவர் மீது வாள்வெட்டு தாக்குதலை நடத்தியதாகவும் அதில், 31 வயது இளைஞர் உயிரிழந்தார் என்றும் 23 வயது இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் தெரிவிக்கப் பட்டது.

07

## குளவி கொட்டி 39 மாணவர்கள் பாதிப்பு

கிளிநொச்சி, பெப். 06

கிளிநொச்சியில் பிரபல பாடசாலையில் குளவி கொட்டுக்கு உள்ளாகி 39 மாணவர்களும் 3 ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை காலை வருடாந்த இல்ல

07

# வடக்கு, கிழக்கில் காணி, மத உரிமைகள் அரச அதிகாரிகளாலேயே மீறப்படுகின்றன

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

புதுடில்லி, பெப். 06

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பாலும் அரச அதிகாரிகளாலேயே காணி உரிமைகள், மத உரிமைகள் என்பன மீறப்படுகின்றன. அத்துடன், கடந்தகால மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் படைத் தரப்பினரின் தொடர் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர் - என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மேலும், மனித உரிமைகள்சார் கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான முன்னேற்றத்தையே அநுர குமார தலைமையிலான அரசாங்கம் எட்டியுள்ளது என்றும்

07

## மின்சாரக் கட்டணத்தை 30 வீதத்தால் குறைப்போம்

### எரிசக்தி அமைச்சர் குமார ஜயகொடி

கொழும்பு, பெப். 06

“வாக்குறுதி அளித்தபடி மூன்று ஆண்டுகளுக்குள் மின்சார கட்டணத்தை 30 சதவீதத்தால் குறைப்போம்”, என்று எரிசக்தி அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

07

## இந்தியா அன்பளித்த பெய்லி பாலங்கள் கொழும்பு வந்தன

கொழும்பு, பெப். 06

இந்தியா அன்பளித்த 10 பெய்லி பால தொகுதிகள் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன.

இந்த பால தொகுதிகளை இலங்கைக்கான இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் சத்யஞ்சல் பாண்டே, துறைமுக மற்றும் விமானசேவைகள் பிரதி அமைச்சர் ஜனித்த ருவன் கொடித்துவக்குவிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

“டித்வா” சூறாவளியால் பாலங்கள் அழிவடைந்து வீதி போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. இதற்கு தீர்வுகாணும் விதமாகவே மேலும்

07

## சபாநாயகர் விலகவேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, பெப். 06

சபாநாயகர், அவரின் தனிப்பட்ட செயலாளர்மீது இலஞ்சம், ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. விசாரணைகள் முடியும்வரை அவர்கள் தமது பொறுப்புகளிலிருந்து விலகியிருக்க வேண்டும் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு கூறினார். அத்துடன், “சபாநாயகருக்கு எதிராக பதவி நீக்கப்பட்ட

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புக்கு அடுத்து யாழிலேயே நீரிழிவு நோயாளர் தொகை அதிகம்

## மருத்துவ நிபுணர் அரவிந்தன்




யாழ்ப்பாணம், பெப். 06
நாட்டிலேயே கொழும்புக்கு அடுத்து யாழ்ப்பாணத்திலேயே நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது என்று யாழ். போதனா மருத்துவமனையின் நீரிழிவு தொடர் பான மருத்துவ நிபுணர் மருத்துவர் ம.அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா மருத்துவமனை நீரிழிவு சிகிச்சை நிலையமும் யாழ். மருத்துவபீட சமுதாயம் மற்றும் குடும்பநல மருத்துவத்துறையும் நடத்தும் நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் மருத்துவ பீடத்தில் நடைபெறவுள்ளது. இது தொடர்பாக அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், யாழ்ப்பாணத்தில் நீரிழிவு நோயின் தாக்கம் அதிகரித்து வருகிறது. குறிப்பாக யுவதிகள், இளைஞர்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது. கொழும்பு மாவட்டத்துக்கு அடுத்ததாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இது அபாய அறிகுறியாகும் இந்தத் ருணத்தில் இளைய தலைமுறையை காப்பாற்ற வேண்டிய கடப்பாடு இருக்கிறது. நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வுக்கு உலக மருத்துவ நிறுவனம் அனுசரணை வழங்குகிறது.


இந்த நிகழ்வில் பல்வேறு விதமான நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. உணவுத் திருவிழா ஆரோக்கிய உணவு தொடர்பான பட்டிமன்றம். மருத்துவ மாணவர்கள, மருத்தவர்களின் கலை நிகழ்வு போன்ற விழிப்புணர்வு நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. இதில், அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# பாலம் உடைப்பெடுத்ததால் நெல் மூடைகள் வீதிகளில்!

முல்லைத்தீவு, பெப். 06
முல்லைத்தீவின் அக்கரை வெளி விவசாயிகள் அறுவடை செய்த சுமார் 5 ஆயிரம் நெல் மூடைகளை எடுத்து வரமுடியாது சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொக்குத்தொடுவாயின் அக்கரைவெளிக்கு செல்லும் வீதிகள் பெருமளவில் சேதமடைந்துள்ளமையாலும் விளாத்தியடி இறக்கப் பாலம் உடைப்பு எடுத்தமையாலும் வாகனங்கள் செல்லமுடியாதுள்ளது. இதனால், நெல் மூடைகள் வீதியில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் விவசாயிகளின் முறையீட்டை அடுத்து அங்கு சென்ற வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் விவசாயிகளின் நிலைமையை நேரில் அவதானித்தார். அத்துடன், இது தொடர்பில் உரிய தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாகவும் உறுதியளித்துள்ளார். (ஐ)



# "என்று தணியும் இந்த சுதந்திர தாகம்" கருத்தரங்கு யாழில் நடைபெற்றது!

யாழ்ப்பாணம், பெப். 06
"என்று தணியும் இந்த சுதந்திர தாகம்", என்ற தொனிப் பொருளிலான கருத்தரங்கு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

வல்வெட்டித்துறை நகர சபையின் நகரபிதா எம். கே. சிவாஜிலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு விடுதலைப் போரில் உயிர்நீத்த ஆத்மாக்களுக்கான அகவணக்கத்துடன் ஆரம்பமானது.

இதில், "சிறீ லங்காவின் சுதந்திர தினமும் தமிழ் மக்களும் தொடர்பில் அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து, சட்டத்தரணி சரவணமுத்து நவரத்தினம் (கரிகாலன்), தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ. கஜேந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிறீகாந்தா ஆகியோர் உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)




# மாகாண சபைகள் தேர்தலை அரசு உடன் நடத்தவேண்டும்

## தமிழர் சமூக ஜனநாயக கட்சி வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 06
மாகாண சபைகளுக்கான தேர்தலை அரசாங்கம் உடனடியாக நடத்த வேண்டும். மாகாண சபைகளுக்கு அரசியல் யாப்பால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முறையாகவும் முழுமையாகவும் வழங்கி மக்களாட்சியை கொண்டவையாக - அவை செயல்படுவதற்கு வேண்டியவனற்றை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் மத்திய குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்திலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில், இணைந்த வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு,

கடந்த 8 ஆண்டுகளுக்கு மேலாக மாறி மாறி வந்த அரசாங்கம் ஒவ்வொன்றும் இலங்கையில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்தாமல் காலம் கடத்தி வந்திருகின்றன. மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தாமல் காலம் தள்ளிக் கொண்டே போவது அந்தந்த மாகாண மக்களின் அடிப்படை உரிமையை நிராகரிப்பதாகும். 2017ஆம் ஆண்டு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் (திருத்த) சட்டமானது நடை முறைப்படுத்த முடியாத சட்டமாகவே தொடர்ந்து இருந்து வருகிறது. நடைமுறைப்படுத்த முடியாத சட்டமொன்றை காரணம் காட்டி மாகாண சபைகள் தேர்தல்களை நடத்தாமல் காலத்தை தள்ளிச் செல்வது ஜனநாயக விரோதமானதாகும்.

இப்போது ஆட்சியிலுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மாகாண சபைகள் தேர்தலை தாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் நடத்துவதாக கூறியே சிறுபான்மை தேசிய இன மக்களின் ஆதரவை அமோகமாகப் பெற்று ஆட்சி அமைத்தார்கள். ஆனால், ஆட்சிக்கு வந்த நாள் தொட்டு ஜனாதிபதி உட்பட அரசாங்க அமைச்சர்கள் ஒவ்வொருவரும் ஆள்மாறி ஆள் மாகாண சபைகள் தேர்தலை காலம் தள்ளிப் போடுவதற்கு வெவ்வேறு விதமான காரணங்களை கூறி வந்திருக்கிறார்கள்.

கடைசியாக, மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவது தொடர்பாக முடிவெடுப்பதற்கென பாராளுமன்ற குழு ஒன்றை நியமித்திருக்கிறார்கள். இதுவும் குறிப்பிட்ட தேர்தல்களை மேலும் காலம் தள்ளிச் செல்வதற்கான அரசாங்கத்தின் தந்திரமாகவே பார்க்க வேண்டி உள்ளது.

மாகாண ஆட்சி முறைமைக்கே எதிரான மக்கள் விடுதலை முன்னணியின் கடந்தகால கொள்கையையே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடைப்பிடிப்பதாகவே கருத வேண்டியுள்ளது.

மக்களாட்சியைக் கொண்ட மாகாண ஆட்சிகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார அமைப்புகள் கால இடைவெளியின்றி தொடர்ச்சியாக நடைமுறையில் செயல்படுவது, மிக அவசியமானதாகும் - அவற்றுக்கான தேர்தல்கள் நடைபெறுவதை அரச ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள் தங்களது சுய அரசியல் ஆதாய நோக்கோடு தீர்மானிப்பது அதிகார துஷ்பிரயோகமே.

மாகாண சபைகளுக்கான தேர்தலை விகிதாசார முறையின் அடிப்படையில் உடனடியாக நடத்துவதற்கான சட்டத்தை பாராளுமன்றில் நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க உறுதி செய்ய வேண்டும். மாகாண சபைகளுக்கு அரசியல் யாப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அனைத்தும் முறையாகவும் - முழுமையாகவும் அமுலாக்கப்படுவதற்கு வேண்டியவற்றை காலம் தாழ்த்தாது செய்ய வேண்டும் - குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# பாரதி - ஒரு மனிதநேய ஊடகன் நினைவுமலர் வெளியீடு நாளை

யாழ்ப்பாணம், பெப். 06
மறைந்த முதுபெரும் பத்திரிகையாளர் பாரதி இராஜநாயகத்தின் முதலாவது ஆண்டு நினைவை முன்னிட்டு "பாரதி - ஒரு மனித நேய ஊடகன்" நினைவுமலர் வெளியீடு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயில் அண்மையாக உள்ள ஹம்சியா மஹாலில் நடைபெறும் இந்த நிகழ்வில் மலர் வெளியீட்டை தொடர்ந்து சிறப்புரைகள் நடைபெறவுள்ளன. (ஐ)

# மத்தள விமான நிலையம் 2025இல் புதிய சாதனை!

கொழும்பு, பெப். 06
மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் கடந்த ஆண்டு அதிக பயணிகளை கையாண்டு புதிய சாதனை படைத்துள்ளது என்று விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் அறிவித்துள்ளது.

2013ஆம் ஆண்டு திறக்கப்பட்ட மத்தள விமான நிலையம் கடந்த ஆண்டு ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 614 பயணிகளை கையாண்டுள்ளது. அத்துடன், 703 சர்வதேச விமானங்கள் அங்கு தரையிறங்கியுள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளாக மத்தள விமான நிலையத்தின் பயணிகள் கையாளும் திறன் தொடர்ச்சியான வளர்ச்சியை கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர், விமான நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலவிய வனவிலங்கு தொடர்பான அச்சுறுத்தல்கள் (முக்கியமாக பறவைகள் மற்றும் யானைகள்) காரணமாக, விமானப் பாதுகாப்பு கருதி பல விமான நிறுவனங்கள் மத்தளத்திற்குச் சேவைகளை வழங்கத் தயக்கம் காட்டி வந்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிறை அதிகாரி ஹெரோயினுடன் கைதானார்

கொழும்பு, பெப். 06
பூஸா அதிஉயர் பாதுகாப்பு சிறைச்சாலையின் அதிகாரி ஒருவர் ஹெரோயின் போதைப்பொருளுடன் நேற்று வியாழக்கிழமை ரத்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிகள் அனைவரும் கடமைக்கு செல்வதற்கு முன்னதாக சோதிக்கப்பட்டனர். இதன்போது சந்தேக நபரான சிறை அதிகாரியிடமிருந்து 7 கிராம் 180 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர் ஹக்மன - எல்லவெல பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடையவராவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ரத்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
06.02.2026 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், தை 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## ரில்வினின் இந்திய பயணம்

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளரும் ஜே. வி. பி.யின் கொள்கையை தீர்மானிக்கும் செல்வாக்குமிக்க நபராகவும் கருதப்படும் ரில்வின் சில்வா தலைமையிலான குழுவினர் இந்தியா சென்றுள்ளனர். இந்தப் பயணம் கடந்த ஆண்டு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், டித்வா புயல் அனர்த்தத்தை தொடர்ந்து பயணம் பிற்போடப் பட்டது.

ஜனாதிபதி அநுர குமாரவின் முதல் பயணம் புதுடில்லிக்கானதாக இருந்தபோது ரில்வின் சில்வாவின் முதல் பயணம் சீனாவுக்கானதாக இருந்தது. ரில்வினின் இந்த நகர்வு சந்தேகங்களையும் ஏற்படுத் தியிருந்தது. ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தலைமையிலான கடந்த ஒரு வருட கால ஆட்சியின்போது ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறான கணிப்புகளை காண முடியவில்லை.

ஜே. வி. பி. அடிப்படையில் ஒரு சீன சார்பு அரசியல் இயக்கமாகவே பலராலும் நோக்கப்பட்டது. ஆனால், அவ்வாறான நகர்வுகளை இது வரையில் காணமுடியவில்லை. கோட்டாபயவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து சீனாவின் நகர்வுகளிலும் பின்னடைவுகளே தெரிகின்றன. அம்பாந் தோட்டையில் சீனாவால் நிறுவப்படவிருந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்கான முதலீட்டிலிருந்தும் சீனா விலகிவிட்டது. விடயத்தை நகர்த்துவதில் காலதாமதம் ஏற்பட்ட நிலையிலேயே சீனா அதிலிருந்து வெளியேறிவிட்டது.

ஜே. வி. பி.யின் கடந்த காலத்தை அடிப்படையாகக் கொண்டு சில விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டாலும்கூட அடிப்படையில் ஜே. வி. பி. அதனளவில் மாற்றங்களையே காண்பித்து வருகிறது. இதுவரையான நிலைமை இவ்வாறுதான் இருக்கிறது. எதிர்காலம் எவ்வாறு அமையுமென்று கூற முடியாதுவிட்டாலும்கூட, இந்தியாவுடன் நல்ல உறவில் இருக்க வேண்டும் என்னும் பார்வை ஜே. வி. பி.யிடம் இருப்ப தாகவே தெரிகிறது.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் முன்னைய ஆட்சியா ளர்கள் போன்றுதான் ஜே. வி. பி.யும் செயல்படுகின்றது. ஜே. வி. பி.யின் கடந்த காலம் அடிப்படையிலேயே அதிகாரப் பகிர்வுக்கு எதிரான தாகவே இருந்தது. இந்தப் பின்புலத்தில் மாகாண சபை முறைமையை யும் ரில்வின் ஒரு தோல்வியடைந்த முறைமையாகவே கூறிவருகிறார். ஆனால், அதற்கான மாற்றுத் திட்டம் பற்றி அவரோ, ஜனாதிபதியோ இதுவரையில் கூறவில்லை. இந்த நிலையில் இந்தியாவின் கரிசனை களை அறியும் நோக்கம் ரில்வினிடம் நிச்சயம் இருக்கும்.

கடந்த ஆண்டு ரில்வின் இங்கிலாந்து சென்றிருந்தார். அப்போது தமிழ் புலம்பெயர் பிரதிநிதிகள் சிலருடன் கலந்துரையாடியிருந்தார். இதன்போது, தாங்கள் இந்திய எதிர்ப்பில் தொடர்ந்தும் இருக்கப் போவ தில்லை என்று கூறினாரென செய்திகள் வெளியாகியிருந்தன. ரில்வினின் சிந்தனை மாறிவிட்டதா அல்லது இல்லையா என்பதற்கு அப்பால் பிராந்திய நிர்ப்பந்தங்களுக்கு கட்டுப்பட வேண்டிய பொறுப்பு இலங்கையின் ஆட்சியாளருக்கு உண்டு. ஆனால், மாகாண சபை விடயத்தில் மட்டும் ரில்வின் முன்னைய நிலைப்பாட்டில் இருப்பதுதான் சிக்கலானது. தமிழர் பக்கத்திலும் வழமையான எதிர்ப்பு அரசியல் அடிக்கடி முகங்காட்டுவது ஒரு வகையில் சுமுகமாக உரையாடுவதற் கான தடையாக இருப்பதும் முன்னைய விரிசல் ஏதோவொரு வகையில் பேணப்படுகின்றது. இதுவும் சிக்கலானதுதான்.

# இலங்கை தொழிலாளர்கள் வழங்கிய சேவைக்கு தென்கொரியா பாராட்டு!




கொழும்பு, பெப். 06

கொரியப் பொருளாதா ரத்துக்கு இலங்கைத் தொழி லாளர்கள் ஆற்றிய குறிப்பி டத்தக்க பங்களிப்பை தென் கொரிய தேசிய சட்டமன்றத் தின் பிரதி சபாநாயகர் லீ ஹக் - யங் பாராட்டியுள்ளார்.

மேலும் அவர்களின் சேவைக்காக இலங்கைக்கு தனது நன்றியை அவர் தெரி வித்துள்ளார்.

கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம் பாட்டு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தியுடனான சந்திப்பின் போது அவர் இந் தக் கருத்துக்களைத் தெரிவித் தார்.

இந்தக் கலந்துரையாட லின்போது, கொரிய தொழி லாளர் சந்தையில் இலங்கை தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கு வதற்காக கொரிய அரசாங் கத்திற்கு அமைச்சர் ஹந்துன் நெத்தி தனது பாராட்டுக ளைத் தெரிவித்தார்.

இலங்கையில் மிகவும் திற மையான மற்றும் நன்கு பயிற்சி பெற்ற பணியாளர் கள் உள்ளனர் என்பதையும் அவர் எடுத்துரைத்தார்.

கொரிய முதலீட்டாளர் கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கான சாத்தியக் கூறுகள், உள்ளூர் பணியா ளர்களிடமிருந்து பயன டைதல் மற்றும் இலங்கை யில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைக் கொண்டு இந்தியா, பாகிஸ்தான் மற் றும் பங்களாதேஷ் போன்ற பிராந்திய சந்தைகளை அணு குதல் ஆகியவற்றை இந்தக் கூட்டம் மேலும் வலியுறுத்தியது.

இலங்கையின் தற் போதைய சர்வதேச நாணய நிதியத்துடனான ஈடுபாட் டைப் போலவே, தென் கொரியாவும் கடந்த காலங்களில் சவாலான பொருளாதார காலகட் டங்களை எதிர்கொண் டதாகக் குறிப்பிட்ட பிரதி சபாநாயகர் லீ ஹக்-யங், இலங்கை அதன் தற் போதைய சவால்களை சமா ளித்து வளர்ந்த பொருளா தாரமாக மாறுவதை நோக்கி முன்னேறும் என்று நம் பிக்கை தெரிவித்தார். (அ)

# எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 41 சிகிச்சை மையங்கள்!

கொழும்பு, பெப். 06

தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 41 சிகிச்சை மையங்கள் நடத்தப்படுகின் றன என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் பாராளு மன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு நேற்று பதில் வழங்கும் போதே, அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட் டார்.

அத்துடன், 4 ஆயிரத்து 771 எயிட்ஸ் நோயாளர்க ளும், ஆயிரத்து 469 சிபிலிஸ் நோயாளர்களும் 2 ஆயிரத்து 891 ஹெர்பீஸ் நோயாளர்க ளும் அவற்றில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனிடையே, எயிட்ஸ் நோயைத் தடுப்பதற்காக வழங்கப்படும் மருந்துகளில் தற்போது 36 ஆயிரத்து 421 மாத்திரைகள் கையிருப்பில் இருக்கின்றன. இவை 4 மாதங்களுக்குப் போது மானவை. எனவே அந்த நோய்களுக்கான மருந்துக ளில் எவ்வித தட்டுப்பாடும் இல்லை - என்றும் அமைச் சர் தெரிவித்தார். (அ)

# மகிந்தானந்த, நளினுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 06

முன்னாள் அமைச்சர்க ளான மகிந்தானந்த அளுத் கமகே, நளின் பெர்னா ண்டோ மற்றும் விளை யாட்டு அமைச்சின் முன் னாள் செயலாளர் நந்த மல்ல வாராச்சி ஆகியோருக்கு எதி ராக சட்ட மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் முதற்கட்ட ஆட் சேபனைகள் தொடர்பான உத்தரவை எதிர்வரும் மார்ச் 25ஆம் திகதிக் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று ஒத்திவைத்தது.

இந்த வழக்கு மேல் நீதி மன்ற நீதிபதி புத்திக சிறீரா கல முன்னிலையில் விசார ணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டபோது, பிரதிவாதி களான மகிந்தானந்த அளுத் கமகே, நளின் பெர்னாண்டோ ஆகியோர் சிறைச்சாலை அதிகாரிகளால் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

பிரதிவாதி தரப்பு சட்டத் தரணிகள் எழுப்பிய முதல் கட்ட ஆட்சேபனைகள் தொடர்பான உத்தரவு நேற்று அறிவிக்கப்படவி ருந்த போதிலும், உத்தரவு இன்னும் தயாராக இல்லா மையால் மார்ச் 25ஆம் திகதி உத்தரவு அறிவிக்கப்படுமென நீதிபதி தெரிவித்தார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பெப்ரவரி - 06 வெள்ளிக்கிழமை | | |
| விசுவாவசு வருடம் - | | தை 23 |
| நல்ல நேரம் | : | 09.00 - 10.30 |
| ராகு காலம் | : | 10.30 - 12.00 |
| திதி | : | பஞ்சமி |



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். நினைத்தது நிறைவேறும்.

**இடபம்**
பயணங்களால் பயனடைவீர்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**மிதுனம்**
விருந்தினர் வருகை அதிகரிக்கும். சொத்துப் பிரச்சினைக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றிக்கு வித்திடும்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள். புது அத்தியாயம் தொடங்கும்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**கன்னி**
வேலைச்சுமையால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.

**துலாம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். சபைகளில் மரியாதை கிடைக்கும். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். மதிப்பு மரியாதை கூடும்.

**விருட்சிகம்**
பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**தனுசு**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். மகிழ்ச்சியான நாள்

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டிய நாள்.

**கும்பம்**
ஆடை ஆபரணம் சேரும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். தாயாரின் உடல் நிலை சீராகும். தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வேலைகளை உடனடியாக முடிப்பீர்கள்.

**மீனம்**
வாகன வசதிப்பெருகும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உறவினர் உங்கள் உதவியை நாடுவார்கள். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

# வவுனியா வடக்கு தவிசாளர் திரிபுபடுத்தி வெறுப்புணர்வு கருத்துகளை கூறுகிறார்!

## பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க

வவுனியா, பெப். 06

வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் திரிபுபடுத்தி வெறுப்புணர்வை தூண்டும் விதமாக தனது கருத்துக்களை தெரிவித்துள்ளார். எனவே நடந்த சம்பவம் தொடர்பாக விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு ஆளுநருக்கு தான் கோரிக்கை விடுத்துள்ளதாக கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு (வெலிஓயா) பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது கூட்டத்தில் கலந்து கொள்ளச்சென்ற வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் தி.கிருஸ்ணவேணி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவால் கூட்டத்தில் வைத்து பழிவாங்கப் பட்டதாக தெரிவித்திருந்தார். இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்



போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-


மணலாறு அபிவிருத்திக்குழுக் கூட்டம் காலை 9.30 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நான் அந்த நேரத்தில் அங்கு சென்றிருந்தேன். கூட்டம் ஆரம்பித்து 30 நிமிடங்களின் பின்னர் பிரதேச செயலாளர் மற்றும் வவுனியா வடக்கின் தவிசாளருக்கிடையில் விவாதம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இதன்போது மேடையின் முன் வரிசையில் அமரவேண்டும் என தவிசாளர் கோரிக்கை விடுப்பதாக பிரதேச செயலாளர் என்னிடம் வந்து கூறினார். இதனையடுத்து மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சின் விதிமுறைகளின்படி மேடையில் அமர்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே அனுமதி உள்ளது. இது தொடர்பாக நான் விளக்கமளித்திருந்தேன்.

இருப்பினும் வலுக்கட்டாயமாக அவர் எனக்கு அருகில் இருந்த ஆசனத்தில் அமர்ந்தார். நான் எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்காமல் கூட்டத்தை ஆரம்பித்திருந்தேன்.

அந்த இடத்தில் 50 அரச அதிகாரிகள் இருந்தனர். அவர்களுள் தமிழ் அதிகாரிகளும் அடங்குவர். பிரதேச செயலாளர் ஒரு தமிழர். கூட்டத்தில் மொத்தமாக 150 பேர் இருந்தனர். எனவே அவர்களிடம் விசாரணை நடத்தி நான் அவரை அவமதித்தேனா என்பதை தெளிவுபடுத்தவேண்டும்-என்றார். (அ)

# முல்லைத்தீவு இ.போ.ச. சாலையின் முகாமையாளராக இரத்தினரூபன்



முல்லைத்தீவு, பெப். 06

இலங்கை போக்குவரத்துச் சபையின் முல்லைத்தீவு சாலை முகாமையாளராக ஆர்.இரத்தினரூபன் இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதான மனித வள முகாமையாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் பருத்தித்துறை சாலையில் சிரேஷ்ட அதிகரியாக பணியாற்றிய இவருக்கான பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றக் கடிதத்தை பருத்தித்துறை சாலை முகாமையாளர், உதவி முகாமையாளர், உதவி முகாமையாளர் (நிதி) மற்றும் பணியாளர்கள் சேர்ந்து வழங்கினர். இரத்தினரூபன் நேற்று முல்லைத்தீவு சாலை முகாமையாளராக கடமைகளை பொறுப்பேற்றார். (அ)

# கிளிநொச்சியில் வெடிக்காத கைக்குண்டு!

கிளிநொச்சி, பெப். 06

கிளிநொச்சி - உமையாள்புரம் பகுதியில் நேற்று முன் தினம் பிற்பகல் வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று இனங்காணப்பட்டது.

குறித்த பகுதியில் சிறுவர்கள் தமது பொழுதுபோக்கு நடவடிக்கைக்காக நீர் ஓடும் வாய்க்கால் அருகாமையில் சென்ற போது வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்றை அவதானித்துள்ளனர்.

உடனடியாக இந்த விடயம் கிளிநொச்சி பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் ஆபத்தான நிலையில் காணப்பட்ட கைக்குண்டை உரிய பாதுகாப்புடன் அகற்றுவதற்கு கிளிநொச்சி நீதி மன்ற அனுமதியை கோரியுள்ளனர். (அ-05)


# தியாகி நடராஜனின் நினைவேந்தல் யாழில்!

யாழ்ப்பாணம், பெப். 06

தமிழ்த் தேசியப் பற்றாளர் தியாகி திருமலை நடராஜனின் 69வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தாயக நினைவேந்தல் பணிமனையால் யாழ்ப்பாணத்தில் நேற்று முன் தினம் மாலை அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 04.02.1957 அன்று ஒன்பதாவது சுதந்திர தின நாளன்று தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து தமிழர் தேசமெங்கும் சுதந்திர தினத்தை தமிழர்கள் கரிநாளாக பகிஷ்கரித்தனர்.

திருமலையில் உயரமாக பறக்கவிடப்பட்டிருந்த சிங்கக் கொடியை அகற்றி கறுப்புக் கொடியைக் கட்டமுயன்ற இனப்பற்றும் தேசப்பற்றும் நிரம்பிய 22 வயது இளைஞரான தியாகி நடராஜன் சுட்டு படுகொலை செய்யப்பட்டார்.



அவர் தேசியக் கொடியுடன் மண்ணில் வீழ்ந்து மாய்ந்த நிகழ்வு அன்று வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தையே உலுக்கியது.

இந்நிகழ்வில் தாயக நினைவேந்தல் குழுவினர் மற்றும் தமிழ்த் தேசிய பற்றாளர்கள் என அனைவரும் கலந்து கொண்டு தியாகி நடராஜனின் உருவப்படத்திற்கு பொதுச்சுடர் ஏற்றி மலர் அஞ்சலி செய்து மாலை அணிவித்து கருத்துரைகள் வழங்கினர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3,065 பாடசாலைகளில் ஆசிரியர் எண்ணிக்கை 10 இற்கும் குறைவு

**மக்கள் தொகை, புள்ளிவிவரத்துறை தகவல்**

கொழும்பு, பெப். 06

நாடெங்கும் உள்ள 3065 அரச பாடசாலைகளில் 10 ஆசிரியர்களுக்கும் குறைவாக உள்ளதாக மக்கள் தொகை மற்றும் புள்ளிவிவரத்துறை தகவல்கள் காட்டுகின்றன.

2025 ஆம் ஆண்டுக்கான புள்ளிவிவரங்கள்படி, நாட்டில் 10,047 பாடசாலைகள் உள்ளன. இதில் 3,065 பாடசாலைகளில் ஆசிரியர் எண்ணிக்கை 10 இற்குக் குறைவாக இருக்கிறது, அவற்றில் ஒரு பாடசாலை தேசியப் பாடசாலையாகும்.

மேலும், 1,645 அரசுப் பாடசாலைகளில் மாணவர்கள் எண்ணிக்கை 50 இற்கு குறைவாக உள்ளது. இந்தப் பாடசாலைகளில் ஒரு தேசியப் பாடசாலை மற்றும் 1,644 மாகாணப் பாடசாலைகள் அடங்கும். 51,100 மாணவர்கள் கொண்ட 1,648 பாடசாலைகள் அனைத்தும்மாகாணப் பாடசாலைகள் ஆகும்.

இதே நேரத்தில், 2024- ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2025 ஆம் ஆண்டில் அரசுப் பாடசாலைகளில் முதலாம் வகுப்பு சேர்க்கை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2025 இல், அரசப் பாடசாலைகளில் 266,281 மாணவர்கள் முதலாம் வகுப்பில் சேர்க்கை பெற்றனர்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை!

கொழும்பு, பெப். 06

கொழும்பு, ஆட்டுப்பட்டித் தெரு, கதிரேசன் வீதிப் பகுதியில் நேற்று முன்ன தினம் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவருக்கும் மற்றொரு நபருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறின் காரணமாக இக்கொலை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

# பிரதமர் வெளியிட்ட கருத்தை மறுக்கிறது ஆசிரியர் சங்கம்!

கொழும்பு, பெப். 06

புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழ் அறிமுகமான 6ஆம் தர பாடத் தொகுதிகள் அரசுக்கு நட்டம் ஏற்படுத்தவில்லை என்ற பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியவின் கருத்தை இலங்கை ஆசிரியர் சங்கம் மறுத்துள்ளது.

குறிப்பாக, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள 6ஆம் தர ஆங்கில மொழி தொகுதியின் தயாரிப்பு மற்றும் அச்சிடுதலுக்கே சுமார் 65 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக அதன் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பிரச்னை உள்ள பகுதிகளை நீக்கி மீதியை பயன்படுத்தினாலும் அது நட்டமாகவே கருதப்படவேண்டும் என்றும், அசல் வடிவில் தொகுதியை விநியோகிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

இந்த தொகுதிகள் 2026 இல் மாணவர்களுக்கு வழங்கப்படாததால், பாடசாலைகள் மீண்டும் பழைய பாடத்திட்டத்திற்கும் பழைய பாடப்புத்தகங்களுக்கும் திரும்பியுள்ளன.

இதனால் பழைய புத்தகங்களை மீண்டும் அச்சிடுதல், சேமித்தல், விநியோகம் போன்றவற்றிற்கும் கூடுதல் செலவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் பிரியந்த பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் ஹரினி அமரசூரிய, 6ஆம் தர தொகுதிகளில் எதுவும் திரும்பப் பெறப்படவில்லை என்றும், முதல் தவணை தொகுதிகள் மட்டுமே அச்சிடப்பட்டுள்ளன என்றும், நிதி நட்டம் ஏற்படும் வகையில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

# கொங்கிரீட் துண்டு விழுந்து சிறுவன் ஒருவன் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 06

கொழும்பு, முகத்துவாரம் பகதியில் அமைந்துள்ள வீடமைப்புத் தொகுதியில், மேல் மாடியிலிருந்து கொங்கிரீட் துண்டு விழுந்ததில் 7 வயதுச் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த சிறுவன் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த கட்டடத் தொகுதியின் உறுதி மற்றும் பராமரிப்பு குறைபாடுகள் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஆற்றில் மூழ்கி ஒருவர் பலி!

கொழும்பு, பெப். 06

மாத்தளை மாவட்டம், சிகிரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திகம்பதன பிரதேசத்தில் மஹாவெள ஆற்றில் மூழ்கி ஒருவர் உயிழந்துள்ளார்.

சம்பவத்தில் கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ தினத்தன்று நண்பர்களுடன் நீராடுவதற்கு சென்றி நீரில் மூழ்கி மரணித்துள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சிகிரியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தேசிய பெண்கள் ஆணைக்குழு செயல்படாமையால் ஏமாற்றம்!

கொழும்பு, பெப். 06

தேசிய பெண்கள் ஆணைக்குழு நடப்பு காலப்பகுதியில் செயல்படாமையால் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏமாற்றம் வெளிப்படுத்தியுள்ளனர்.

பெண் பாராளுமன்றக் குழுவின் துணைத் தலைவி சமிந்த்ராணி கிரியெல்ல, பெண்கள் உரிமைகள் முன்னேற்றம் தொடர்பான வலுவான வாக்குறுதிகளுடன் ஆட்சிக்கு வந்த அரசாங்கம், ஆணைக்குழுவை செயல்படுத்தாதது மிகுந்த ஏமாற்றமளிப்பதாக தெரிவித்துள்ளார்.

2026 வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு இல்லாததும், ஆணைக்குழுவின் முதல் தலைவர் ரமணி ஜயசுந்தர பதவி விலகியதும், ஆணைக்குழுவின் சுயாதீனம் மற்றும் செயல்திறன் குறைந்ததைக் காட்டுகின்றன.

ஜனாதிபதியின் செயலாளருடன் சந்திப்பைக் கோரிய முன்னாள் தலைவர் நான்கு மாதம் முயன்றும் சந்திப்புக்கான வாய்ப்பின்மை ஏற்பட்டது. இதனால், பெண்கள் உரிமைகள் முன்னேற்றும் ஆணைக்குழு, சுயாதீன அமைப்பாக செயல்படமுடியாமல், அரசின் குறைந்த ஆர்வத்தால் சிக்கலான நிலையில் உள்ளதாக பெண் பாராளுமன்றக் குழுவின் துணைத் தலைவி சமிந்த்ராணி கிரியெல்ல கவலை வெளியிட்டார். (அ)

# முதல் பெண் கணக்காய்வாளர் நாயகமாக சமுதிகா பதவியேற்பு

கொழும்பு, பெப். 06



இலங்கையின் முதல் பெண் கணக்காய்வாளர் நாயகமான சமுதிகா ஜயரத்ன நேற்று காலை தேசிய கணக்காயர் அலுவலகத்தில் பணிகளை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டார்.

42ஆவது இலங்கை கணக்காளர் நாயகமாக நியமிக்கப்பட்ட ஜயரத்ன தனது புதிய பணிக்கான தொழில்நுட்ப திறன் மற்றும் அனுபவத்தைக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சமுதிகா ஜயரத்ன வங்கிப் பணிகள், நிதி, காப்பீடு, வரி, பொருளாதார சேவைகள் மற்றும் கடன் நிர்வாகத்தில் அனுபவம் கொண்டவராவார். அவர் 2003 ஆம் ஆண்டில் கணக்காளர் துறையில் தனது தொழிலைத் தொடங்கினார்.

பல ஆண்டுகளாக, சமுதிகா ஜயரத்ன பல அரச அமைப்புகளில் பல பதவிகளில் பணியாற்றி, தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் தலைமைத்துவ திறனில் சிறப்பாக சேவையாற்றி பலரது புகழைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டித்வா சூறாவளிக்கு பின்னர் நாடு மீண்டும் அதிகபட்ச பலத்துடன் கட்டியெழுப்பப்படும்

## கிழக்கு ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர


திருமலை, பெப். 06

டித்வா சூறாவளிக்கு பிறகு நாடு அதிகபட்ச பலத்துடன் மீண்டும் கட்டியெழுப்பப்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தெரிவித்தார்.

78ஆவது தேசிய சுதந்திர தின கொண்டாட்டங்களுடன் இணைந்து, கிழக்கு மாகாண சுதந்திர தின கொண்டாட்டங்கள் நேற்று முன் தினம் திருகோணமலை கடற்கரையில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர்-

இந்த ஆண்டு சுதந்திர தின கொண்டாட்டங்கள் “ இலங்கையை கட்டியெழுப்புவோம்” என்ற கருப்பொருளில் கொண்டாடப்படுவதாகவும், இந்த ஆண்டு டித்வா சூறாவளிக்குப் பிறகு நாடு அதிகபட்ச பலத்துடன் மீண்டும் கட்டியெழுப்பப்படும் என்றும் கூறினார்.



கடந்த காலங்களில் மிகவும் கடினமான காலங்களில் எழுச்சி பெற்ற இலங்கை மக்கள், இந்த சந்தர்ப்பத்தில் ஒன்றிணைந்து நாட்டை வளர்ச்சி நோக்கி இட்டுச் செல்ல முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண தலைமைச் செயலாளர், திருகோணமலை மாவட்ட செயலாளர், மாகாண சபை அதிகாரிகள், முப்படை அதிகாரிகள், சர்வமத தலைவர்கள், காவல் துறை மற்றும் சிவில் பாதுகாப்பு அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள், உள்ளூர்வாசிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

(அ)

# தொழுநோய் விழிப்புணர்வு நாடகம் சம்மாந்துறையில்

அம்பாறை, பெப். 06

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவிற்குட்பட்ட ஹிஜ்ரா சந்தைப் பகுதியில், பொதுமக்களிடையே தொழுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் விசேட வீதி நாடகம் நேற்று முன் தினம் அரங்கேற்றப்பட்டது.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி நௌசாத் மற்றும் மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி ஐ. எல். ஜலால்தீன், மாவட்ட பொது சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம். லாபிர், பொது சுகாதார பரிசோதகர்கள், பொது சுகாதார மருத்துவ மாதுக்கள் ஆகியோரின் அநேரடிப் பிரசன்னத்துடன் இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டது.

தொழுநோய் என்பது 100 வீதம் குணப்படுத்தக்கூடிய ஒரு நோயாகும். சமூகத்தில் நிலவும் தேவையற்ற அச்சம் மற்றும் தயக்கங்களை களைந்து, இந்த நோய் குறித்த அறிகுறிகள் தென்படின் உடனடியாகவும் தயக்கமின்றியும் மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த நாடகம் அமைந்திருந்தது.

(அ)

# மதரஸாக்களின் பரிசளிப்பு விழா

அம்பாறை, பெப். 06

மத்தியமுகாம் அல் மதரஸத்துல் முஹம்மதிய்யா மற்றும் சாளம்பைக்கேணி நூரானியா மதரஸா ஆகியவற்றின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று முன் தினம் சிறப்பாக நடைபெற்றது.


நிகழ்வில் மதரஸா மாணவர்களின் கல்வி, ஒழுக்கம் மற்றும் மத அறிவு வளர்ச்சியை பாராட்டும் வகையில் சிறந்த மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இதில் கலந்து கொண்ட முக்கிய அதிதிகள், மத கல்வியின் முக்கியத்துவம், இளம் தலைமுறையில் இஸ்லாமிய பண்புகள் மற்றும் ஒழுக்கத்தை வளர்ப்பதன் அவசியம் குறித்து உரையாற்றினர்.

மேலும், மாணவர்களால் வழங்கப்பட்ட குர்ஆன் ஓதல், நஸீத் மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகள் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தன.

(அ)

# சாய்ந்தமருது சுகாதார பணிமனையில் புற்றுநோய் விழிப்புணர்வு கருத்தரங்கு



அம்பாறை, பெப். 06

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் புற்றுநோய் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே. மதன் தலைமையில் சுகநலக் கல்வி வழங்கும் செயற்பாடு இளைஞர் கழக உறுப்பினர்களுக்கு நடைபெற்றது.

இந்த செயற்பாட்டில் மார்பகப் புற்றுநோய் வாய் புற்றுநோய் கர்ப்பப்பை புற்றுநோய் போன்றவற்றை பற்றிய விளக்கங்கள் வழங்கப்பட்டதுடன் அவற்றை கண்டறிந்து செயல்படும் முறைகள் பற்றி விளக்கப்பட்டது. மேலும் கடந்த சில தினங்களுக்கு முன்பு நடைபெற்ற தொழுநோய் நடைபவனியில் பங்கேற்ற உறுப்பினர்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரியால் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

(அ)

# அம்பாறை மாவட்ட செயலகத்தில் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள்

அம்பாறை, பெப். 06

“இலங்கையைக் கட்டியெழுப்புவோம்” என்ற கருப்பொருளின் கீழ் நாட்டின் 78ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட செயலகத்திலும் இடம்பெற்றன.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக்க அபேவிக்ரம தலைமையிலும் மேலதிக அராசாங்க அதிபர் ஜொகராஜனின் ஒருங்கிணைப்பிலும் இடம்பெற்ற இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் கிராமப் புற மேம்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதியமைச்சர் வஸந்த பியதிஸ்ஸ மற்றும் அம்பாறை பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுளா ரத்னாயக்க ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வஸந்த பியதிஸ்ஸவினால் தேசிய கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், தேசிய கீதமும் இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நாட்டின் உயிர் நீத்தவர்களுக்காகவும் இராணுவ வீரர்களுக்காகவும் இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.



தொடர்ந்து பல்வேறு கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன், இலங்கை நாட்டின் சுதந்திரம் தொடர்பான தலைமை உரையை அம்பாறை அரசாங்க அதிபர் சிந்திக்க அபேவிக்கிரம நிகழ்த்தினார். அதனை தொடர்ந்து அதிதிகளின் உரையும் இடம் பெற்றதுடன் பலன் தரும் மரக்கன்றும் நடப்பட்டது.

(அ)

# சித்தாண்டி கிராமத்துக்கு டெங்கு சிவப்பு எச்சரிக்கை

மட்டக்களப்பு, பெப். 06

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி பொது சுகாதார பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி கிராமத்தில் டெங்கு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட மழை மற்றும் வெள்ளப்பெருக்கு குறித்த பகுதிகளிலுள்ள கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியிருந்தன. இந்நிலையில் சித்தாண்டி -2, சித்தாண்டி -3, சித்தாண்டி -4 ஆகிய பகுதியில் என்றுமில்லாதவாறு டெங்கு நுளம்பின் தாக்கத்தின் அதிகரிப்பு காரணமாக பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வருதாக அப்பகுதிக்கு பொறுப்பான பொது சுகாதார உத்தியோகத்தர் தெரிவிக்கின்றார்.

குறிப்பாக சித்தாண்டி 2ஆம், 3ஆம், 4ஆம் பிரிவு ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் தொடர்ச்சியாக டெங்கு நுளம்பின் தாக்கத்தினால் நோயாளர்கள் பதிவாகி வருகின்ற நிலையில் இது வரை 64 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று சிலர் வெளியேறிய நிலையில் இன்னும் பலர் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்நிலைமையைக் கருத்தில் கொண்டு கடந்த செவ்வாய்கிழமை பொது சுகாதார பரிசோதகர்களால் விசேட கள ஆய்வு நடவடிக்கைகள் சித்தாண்டி பகுதியில் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பிரிவுக்கு உட்பட்ட 14 பொது சுகாதார பிரிவுகளிலும் உள்ள பொது சுகாதார கள உத்தியோகத்தர்களும் இதில் கலந்து கொண்டு சித்தாண்டி பகுதி அனைத்து பிரிவுகளிலும் உள்ள வீடுகளுக்கு சென்று டெங்கு தொடர்பான இடங்களை கண்டறிந்ததுடன் அதற்கான அறிவுறுத்தல்கள் மற் றும் டெங்கு அபாயம் உள்ள இடங்களை கண்டறிந்து வீட் டின் உரிமையாளர்களுக்கு சட்ட நடவடிக்கை தொடர்பான முறைப்பாடுகளையும் பதிவு செய்தனர்.

(அ)

# மாட்டிறைச்சி விற்பனை தொடர்பில் முறைப்பாடு

அம்பாறை, பெப். 06

அம்பாறை மாவட்ட அட்டாளைச்சேனை பிரதேச சபைக் குட்பட்ட மாட்டிறைச்சி விற்பனை நிலையங்கள் தொடர்பாக பொதுமக்கள் முன்வைத்த முறைப்பாடுகளை அடுத்து, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எஸ்.எம். உவைஸ் நேரடியாக களத்தில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அதனடிப்படையில், மாட்டிறைச்சி விற்பனை தொடர்பாக கடை உரிமையாளர்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டு, விலை நிர்ணயம் தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டதாக பிரதேச சபை தெரிவித்தது.

அதன்படி, 800 கிராம் தனி இறைச்சி மற்றும் 200 கிராம் எலும்பு சேர்த்து ஒரு கிலோகிராம் மாட்டிறைச்சி 2,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட வேண்டும் எனவும், எலும்பு இன்றி தனி இறைச்சி ஒரு கிலோ 2,200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த தீர்மானத்தை எதிர்த்து சில மாட்டிறைச்சி விற்பனை நிலையங்கள் கடைகளை திறக்காமல் மூடியுள்ளதாகவும், இவ்வாறான மக்கள் விரோத நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரில்வின்...

பயணமாகினர்.

“இந்திய கலாசார உறவு குழுவின்” அழைப்பை ஏற்று அவர்கள் இந்தியா சென்றுள்ளனர். புதுடில்லி செல்லும் இந்தக் குழுவினர், குஜராத், கேரளா மாநிலங்களுக்கும் பயணிப்பர் என்றும் அந்த மாநிலங்களின் முதலமைச்சர்களையும் சந்திப்பர் எனவும் கூறப்பட்டது. அத்துடன், இந்தியாவின் விவசாய, தொழில் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுக்கு உரித்தான மத்திய நிலையத்தையும் பார்வையிடுவர்.

ரில்வின் தலைமையிலான குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்களான க. இளங்குமரன், கி. செல்வராஜ், அனைத்து நிறுவன ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி ஜானக அதிகாரி, மக்கள் விடுதலை முன்னணியின் ஊடக பிரிவு பிரதிநிதி ஹேமதிலக கமகே, மக்கள் விடுதலை முன்னணியின் சர்வதேச குழு உறுப்பினர் சட்டத்தரணி கல்பனா மதுஷானி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ஐ)

## புலிகளை...

தலைவருக்கு “முதுகெலும்பு“ இருக்க வேண்டும். பயங்கரவாத ஒழிப்பை இனவாதமாகச் சித்தரிப்பதை அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

அமைச்சர்கள் பகிரங்கமாக மதத் தலைவர்களை விமர்சிப்பது நாகரிகமான சமூகத்துக்கு அழகல்ல. திருகோணமலை போன்ற பகுதிகளில் மதத் தலைவர்கள் நடத்தப்பட்ட விதம் கவலைக்குரியது. அரசாங்கம் மக்களின் நலனை விட அரசியல் பழிவாங்கல்களுக்கே முன்னுரிமை அளிக்கிறது. அதற்காகவே புதிய சட்டங்களைக் கொண்டுவரத் துடிக்கிறது.

சுதந்திர தினத்தில் ஒரு தரப்பினருக்கு மட்டும் கருத்துச் சுதந்திரம் வழங்கப்படுகிறது. மற்றவர்கள் ஒடுக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது. சுதந்திர தினத்தன்று நாட்டின் ஒரு பகுதியில் முன்னெடுக்கப்பட்ட கறுப்புக் கொடி எதிர்ப்பு மற்றும் ஹர்த்தால் விவகாரத்தில் அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டை கொண்டிருப்பதை காண முடிகிறது. உண்மையான ஜனநாயகம் என்பது அனைவருக்கும் சமமான உரிமையை வழங்குவதே ஆகும் - என்றார். (ஐ)

## வடக்கு...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டு உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு நாடுகளினதும் மனித உரிமைகள் நிலவரம் குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

1983 - 2009 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தின்போது நிகழ்த்தப்பட்ட மிகமோசமான போர்க் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கு அரசாங்கங்கள் தவறியிருக்கின்றன. தேசிய நல்லிணக்கம் சார்ந்த வாக்குறுதிகளின் இடையே, தமிழ், முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு அநுர குமார திஸநாயக்க அரசாங்கம் மிகச்சொற்ப விடயங்களையே செய்திருக்கிறது.

சுயாதீன வழக்குத்தொடுநர் பணிமனையை நிறுவுதல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல் என்பன உள்ளடங்கலாக சட்ட மறுசீரமைப்புகள் தொடர்பில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. அதுமாத்திரமன்றி இலங்கையின் குற்றவியல் தண்டனை சட்டக்கோவையின் பிரகாரம் ஓரினச் சேர்க்கை மற்றும் அதுசார்ந்த நடவடிக்கைகள் குற்றமாக்கப்பட்டுள்ளன.

உலக உணவுத் திட்டத்தின் தரவுகளின் பிரகாரம் மூன்றில் ஒரு பங்கு சிறுவர்கள் மந்தபோசணையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட தமது உரிமைகளை அனுபவிப்பதற்கு அவசியமான பொருட்கள், சேவைகளை பெற்றுக்கொள்வதில் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கின்றன.

அநுர குமார திஸநாயக்க அரசாங்கத்தில் சமூக பாதுகாப்பு செலவினங்கள் மிகக்குறைந்த மட்டத்திலேயே பேணப்படுவதால் பல்வேறு உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் செயல்திட்டத்துக்கு அமைவாக அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகள், ஏற்கனவே நலிவுற்ற நிலையில் இருக்கும் மக்கள் மீதான நிதியியல் மீட்சி சார்ந்த அழுத்தங்களை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. இருப்பினும் ஊழலை முறியடிப்பதில் ஓரளவு முன்னேற்றம் அடையப்பட்டிருக்கிறது.

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் இடம்பெற்ற 26 வருடகால யுத்தத்தில் சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இந்தக் காலப்பகுதியில் அரச படையினர் சித்திரவதைகள், சட்டவிரோத படுகொலைகள், பாலியல் வன்புணர்வு, பாலியல் வன்முறைகள், வலிந்து காணாமலாக்கல் மற்றும் பொதுமக்கள் மீதான ஒடுக்குமுறை தாக்குதல்கள் உள்ளிட்ட மிகமோசமான மீறல்களில் ஈடுபட்டனர். இதேபோன்று தற்கொலைக் குண்டுத் தாக்குதல், பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்கள், சிறுவர் போராளிகள் உள்ளிட்ட மீறல்களில் விடுதலைப் புலிகள் இயக்கமும் ஈடுபட்டது.

இந்த மீறல்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதற்கான நம்பத்தகுந்த உள்ளகப் பொறிமுறைகள் இன்மை, பாதிக்கப்பட்ட சில சமூகங்களுக்கு எதிராக தற்போதும் தொடரும் ஒடுக்குமுறைகள் என்பவற்றின் காரணமாக இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயல்திட்டத்தை மேலும்

# இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிக்க பாகிஸ்தானிலிருந்து ‘சாஹிவால்’ காளைகள்!

கொழும்பு, பெப். 06

இலங்கை மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான நட்புறவை மேலும் பலப்படுத்தும் விதமாக, பாகிஸ்தானிலிருந்து உயர்தர ‘சாஹிவால்’ இனக் காளைகள் நேற்று இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டன. இலங்கையின் கால்நடை வளர்ப்புத் திட்டத்தை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை, இரு நாடுகளுக்கும் இடையிலான கால்நடை வளர்ப்பு உறவில் ஒரு முக்கிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. உலகளவில் புகழ்பெற்ற இந்த சாஹிவால் மாடுகள், அதிக வெப்பத்தைத் தாங்கி வளரக்கூடியவை மற்றும் நோய்களை எதிர்க்கும் பலம் கொண்டவை. இந்த காளைகளின் மூலம் உயர்தர விந்தணுக்களைப் பெற்று, அவற்றை இலங்கையிலுள்ள உள்ளூர் மாடுகளுக்குச் செயற்கைச் சினைப்படுத்தல் மூலம் செலுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் இலங்கையிலுள்ள மாடுகளின் இனத் தரம் உயர்வதோடு, பாலின் அளவும் பெருமளவு அதிகரிக்கும். வெளிநாடுகளிலிருந்து அதிக விலைக்கு பால் பொருட்களை இறக்குமதி செய்வதைக் குறைத்து, இலங்கையை பால் உற்பத்தியில் தன்னிறைவு பெறச் செய்வதே அரசாங்கத்தின் இலக்காகும். (அ)

இரு வருடங்களுக்குத் தொடர்வதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை செயல்பாட்டாளர்கள் பலரும் வரவேற்றிருந்தனர். இந்தக் குற்றங்களை புதியதோர் உள்ளகப் பொறிமுறையின் ஊடாக அணுகுவதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்த போதிலும், அதுபற்றிய விவரங்கள் எதனையும் அறிவிக்கவில்லை.

மறுபுறம் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் உள்ளகப் பொறிமுறைகள் தொடர்பில் தமது நம்பிக்கையீனத்தை அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர். மனித உரிமைகள் மீறல், போர்க்குற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக முன்னைய அரசாங்கங்களால் குறைந்தபட்சம் 10 ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்ட போதிலும் அவை பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தப்படுவதற்கோ அல்லது வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான உண்மைகள் வெளிப்படுத்தப்படுவதற்கோ வழிவகுக்கவில்லை.

அதுமாத்திரமன்றி 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு அரசு உடந்தையாக செயல்பட்டதாக சில தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கருத்துகளை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஆதரித்திருப்பினும், அந்தத் தாக்குதல்கள் தொடர்பில் அரசாங்கம் இன்னமும் நம்பத்தகுந்த விசாரணைகளை முன்னெடுக்கவில்லை. தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு வலுவடைந்தமையானது மீறல்கள் தொடர்வதற்கு இடமளித்தது.

மனிதப்புதைகுழிகள் தொடர்பில் செயல்திறன் மிக்க விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அவசியமான போதிய தொழில்நுட்ப வசதிகள் அரசாங்கத்திடம் இல்லை. இதேவேளை, கடந்த காலங்களில் நிலவிய அரசியல் தன்முனைப்பின்மை இதுபற்றிய விசாரணைகள் மழுங்கடிக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்தது. அதன் அர்த்தம் எந்தவோர் எலும்புக்கூடும் யாருடையவை எனக் கண்டறியப்படவோ அல்லது ஏனைய ஆதாரங்கள் முறையாகப் பேணப்படவோ இல்லை. நீண்டகால யுத்தத்தால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதிக்காக போராடும் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினர், சிவில் சமூக செயல்பாட்டாளர்களை பொலிஸார் மற்றும் புலனாய்வுப்பிரிவினர் தொடர்ச்சியாக கண்காணித்தும், அவர்களுக்கு எதிராக ஒடுக்குமுறைகளைப் பிரயோகித்தும் வருகின்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவதாக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி அளித்தபோதிலும், கடந்த காலங்களில் அந்தச் சட்டத்தின் பிரயோகம் வெகுவாக அதிகரித்துள்ளது. 2024இல் 38 வழக்குகளிலும் 2025இன் முதல் 5 மாதங்களில் மாத்திரம் 49 வழக்குகளிலும் பொலிஸாரால் பயங்கரவாதத் தடைச் சட்டம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது - என்றுள்ளது. (ஐ)

## இந்தியா...

10 பெய்லி பால தொகுதிகளை இந்தியா இலங்கைக்கு அன்பளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜனாதிபதி...

ஆராய்ச்சியாளர்கள், சிவில் சமூக அமைப்புகள், சர்வதேச நிறுவனங்கள் பங்கேற்கவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## குளவி...

மெய்வன்மை போட்டிக்கான பயிற்சிகளுக்கு மாணவர்கள் தயாராகிக் கொண்டிருந்தனர். அப்போது பாடசாலையின் மூன்றாவது மாடியிலிருந்த குளவிக் கூடு கலைந்து மைதானத்தில் நின்றிருந்தவர்களை கொட்டியது.

பாதிக்கப்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று திரும்பினர்.

குளவி கூட்டின் ஆபத்து குறித்தும் அதை அகற்ற வலியுறுத்தியும் பாடசாலை நிர்வாகம் இரு மாதங்களுக்கு முன்னரே சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எழுத்துமூலம் கோரிக்கை விடுத்த போதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மின்சார...

மேலும், “மின் அலகு ஒன்றின் உற்பத்தி செலவை குறைக்காமல் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க முடியாது. தற்போது அதிக விலைக்கு வாங்கி குறைந்த விலைக்கு விற்பனை செய்யும் நிலையே காணப்படுகிறது. நாம் நாட்டைப் பொறுப்பேற்கும் போது மின் அலகு ஒன்றின் கொள்வனவு அல்லது உற்பத்தி செலவு 37 ரூபாயாக இருந்தது. தற்போது அதனை 29 ரூபாயாக - அதாவது, 22 சதவீதத்தால் குறைக்க எம்மால் முடிந்துள்ளது. எமது இலக்கு அந்தப் பெறுமதியை 25 ரூபாயாகக் குறைப்பதாகும். அதனைச் செய்து, வாக்குறுதி அளித்தவாறு 3 ஆண்டுகளுக்குள் மின்சார கட்டணத்தை 30 சதவீதத்தால் குறைக்க நடவடிக்கை எடுப்போம்”, என்றார். (ஐ)

## பிரான்ஸில்...

இந்த வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் பொபினி நகர பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சபாநாயகர்...

பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் முன்வைத்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் காலையில் பேசுவதற்கு முற்பட்ட போது சபாநாயகரும் சபை முதல்வரும் அதற்கு இடமளிக்கவில்லை.

“சபாநாயகர்மீது அரச சொத்து முறைகேடு, அரசாங்கத்துக்கு நட்டமேற்படுத்தல் உட்பட பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. சபாநாயகர் இரண்டு அரச இல்லங்களை பயன்படுத்துகிறார். நான் 1994 ஆம் ஆண்டு முதல் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கிறேன் இவரைப் போன்று எவரும் செயல்படவில்லை.

“சபாநாயகர் மற்றும் அவரின் தனிப்பட்ட செயலாளர்மீது இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது. ஆனால், இவர்கள் இன்றும் பதவியில் உள்ளார்கள். ஆகவே, இவர்களுக்கு எதிரான விசாரணைகள் நிறைவுபெறும் வரையில் இவர்கள் பதவிக்கான கடமைகள், பொறுப்புகளில் இருந்து விலகியிருக்க வேண்டும். சபாநாயகரின் செயல்பாடுகளால் இந்த அரசாங்கம் மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் - என்றார். (ஐ)

## ஸ்மார்ட்...

வழங்கி கேள்விகளை கேட்க வேண்டாம். சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பீடத்தை மூடுவதற்கும், கம்பஹா விக்கிரமராராச்சி பல்கலைக்கழகத்தை மூடுவதற்கும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

பாடத்திட்டம் அரசியல் கட்சிகள் ஊடாக தயாரிக்கப்படுவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவரிடம் குறிப்பிட்டுக் கொள்கிறேன். அதற்கு சட்டத்தால் உருவாக்கப்பட்ட அரச நிறுவனம் உள்ளது. அதில் எம்மால் தலையிட முடியாது. புதிய கல்வி மறுசீரமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் கடந்த மாதங்களில் வழங்கிய ஒத்துழைப்பை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். கல்வி மறுசீரமைப்பு பற்றி அவர் தொடர்ச்சியாக அவதானம் செலுத்துவது வரவேற்கத்தக்கது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கை மீனவர்களின் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை

## குற்றச்சாட்டை மறுக்கும் இந்திய தூதரகம்

கொழும்பு, பெப். 06

ஜனவரி 29 ஆம் திகதி இந்தியக் கரையோரக் காவல்படையினரால் இலங்கை மீனவர்கள் குழுவொன்று தாக்கப்பட்டதாகக் கூறப்படுவதை கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் மறுத்துள்ளது.

2026 ஜனவரி 29 அன்று கடலில் இலங்கை மீனவர்கள் தாக்கப்பட்டதாகக்கூறப்படும் சம்பவம் தொடர்பான ஊடகச் செய்திகளைத் மேற்கோள் காட்டி, அறிக்கையொன்றை வெளியிட்டு இந்திய தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது.

தகவல்களைத் திரட்டிய பின்னர், இந்தியக் கடற்படையினரோ அல்லது இந்தியக் கரையோரக் காவல்படையினரோ அத்தகைய தாக்குதல் எதனையும் மேற்கொள்ளவில்லை என்பதை உறுதிப்படுத்த முடியும் என தூதரகம் மேலும் கூறியுள்ளது.

மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்னைகள் தொடர்பில் மனிதாபிமான அணுகுமுறை கடைப்பிடிக்கப்படவேண்டும் எனவும், எந்தச் சந்தர்ப்பத்திலும் பலாத்காரப் பிரயோகம் மேற்கொள்ளப்படக் கூடாது எனவும் இந்தியா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதாக இந்திய தூதரகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இவ்விடயங்கள் தொடர்பில் தூதரகம் இலங்கை அரசாங்கத்துடன் தொடர்பில் இருப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளது.

வென்னப்புவ, வெல்லமங்கர மீன்பிடித் துறைமுகத்திலிருந்து இரண்டு மீன்பிடிப் படகுகளில் சென்ற 12 இலங்கையர்கள், இலங்கைக் கடல் எல்லைக்குள் இருந்த போது, ஜனவரி 29 அன்று இந்தியக் கரையோரக் காவல்படையினரால் தாக்கப்பட்டதாக மீனவர் குழுவொன்று குற்றம் சுமத்தியிருந்தது.

சர்வதேசக் கடல் பிரதேசத்தில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவிட்டு மீண்டும் இலங்கைக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோதே இத்தாக்குதல் இடம்பெற்றதாக மீனவர்கள் தெரிவித்தனர். (அ)

## சுற்றிவளைப்பில் 535 பேர் கைது!

கொழும்பு, பெப். 06

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 535 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் தடுப்புக்காக பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையின் பேரில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட நடவடிக்கையின் நாளாந்த அறிக்கையை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் பொலிஸாரால் 26,800 பேர் சோதனையிடப்பட்டதுடன், இதன்போது சந்தேகத்தின் பேரில் 535 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்த நடவடிக்கையின்போது, குற்றங்களுடன் நேரடியாகத் தொடர்புடையவர்களாக அடையாளம் காணப்பட்ட 15 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 264 பேரும், திறந்த பிடியாணை கொண்ட 140 பேரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் மதுபோதையில் வாகனம் செலுத்திய 321 பேரும், கவனயீனமாக வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 84 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

## புனித சின்னங்களின் வழிபாடு ஆரம்பம்!



கொழும்பு, பெப். 06

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ள வரலாற்று சிறப்பு மிக்க தெவ்னி மோரி புத்த பெருமானின் புனித சின்னங்களை வழிபடுவதற்கு நேற்று முதல் பொது மக்களுக்கு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

இந்த புனித தாதுக்கள் நேற்று முன்தினம் இந்தியாவில் இருந்து எடுத்து வரப்பட்டு ஹுணுபிட்டி கங்காராம விகாரையில் வைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முதல் மலர் அஞ்சலி செலுத்தி வழிபட்டு, இந்த வழிபாட்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

தெவ்னி மோரி புத்த பெருமானின் புனித சின்னங்களை நேற்றுக் காலை 6 மணிமுதல் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 7 மணிவரை வழிபடுவதற்கு பொதுமக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி அநுரவுக்கு நன்றி தெரிவித்த இந்தியப் பிரதமர்

கொழும்பு, பெப். 06

கொழும்பிலுள்ள புனித கங்காராமை விகாரையில் புனித தேவ்னி மோரி சின்னங்களின் தரிசனத்தை ஆரம்பித்து வைத்தமைக்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.




தனது எக்ஸ் தள பதிவொன்றில் இந்திய பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

அந்த பதிவில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2025 ஏப்ரலில் எனது விஜயத்தின்போது இச்சின்னங்களை இலங்கைக்கு அனுப்புவது குறித்து தீர்மானிக்கப்பட்டதுடன் அதன் அடிப்படையில் மக்கள் வழிபாட்டினை மேற்கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.

நமது நாடுகள் ஆழமான நாகரீக மற்றும் ஆன்மீக பிணைப்புகளினால் இணைக்கப்பட்டுள்ளன.

புத்த பெருமானின் கருணை, அமைதி மற்றும் நல்லிணக்கம் குறித்த காலத்தால் அழியாத செய்தியானது தொடர்ந்து மனித குலத்துக்கு வழிகாட்டட்டும்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நாட்டில் முதலாம் தர மாணவர் அனுமதியில் தொடர்ந்து வீழ்ச்சி

கொழும்பு, பெப். 06

நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக முதலாம் ஆண்டுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள புள்ளிவிவர அறிக்கைகளின் (2023-2025) தரவுகளின் அடிப்படையில் அறிந்து கொள்ள முடிந்தது.

இலங்கையின் அரச பாடசாலைகளில் பயிலும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை கடந்த மூன்று ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் 3,882,688 ஆக இருந்த மொத்த மாணவர் எண்ணிக்கை, 2024 இல் 3,816,234 ஆகவும், 2025 இல் 3,747,544 ஆகவும் குறைந்துள்ளது. இது 2023 முதல் 2025 வரையிலான காலப்பகுதியில் சுமார் 3.48 வீத ஒட்டுமொத்த வீழ்ச்சியாகும்.

பாலின ரீதியாகப் பார்க்கும்போது, மாணவர்களின் விகிதம் 49.5 வீதமாகவும் மாணவிகளின் விகிதம் 50.5 வீதமாகவும் அனைத்து ஆண்டுகளிலும் நிலையாகக் காணப்படுகிறது.

2023 இல் 287,639 ஆக இருந்த முதலாம் தர மாணவர் சேர்க்கை, 2025 இல் 266,281 ஆகக் குறைந்துள்ளது. இது சுமார் 7.42 வீத பாரிய வீழ்ச்சியாகும்.

குறிப்பாக, மாகாணப் பாடசாலைகளில் முதலாம் தர அனுமதி 260,845 இலிருந்து 239,714 ஆகக் குறைந்துள்ளது.

மாவட்ட ரீதியிலான மாணவர் அனுமதி மாற்றங்கள் அதிக மாணவர் சனத்தொகையைக் கொண்ட மாவட்டங்களில் மாணவர் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளதைக் காணமுடிகிறது.

கொழும்பு மாவட்டம்: 2023 இல் 325,525 ஆக இருந்த மாணவர் எண்ணிக்கை, 2025 இல் 305,506 ஆகக் குறைந்துள்ளது, இது சுமார் 6.15 வீத வீழ்ச்சியாகும்.

கம்பஹா மாவட்டம்: 317,617 இலிருந்து 297,307 ஆக மாணவர் எண்ணிக்கை சரிவடைந்துள்ளது.

கண்டி மாவட்டம்: 2023 இல் 263,951 ஆக இருந்த மாணவர்கள், 2025 இல் 252,916 ஆகக் குறைந்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டம்: இங்கு மாணவர் எண்ணிக்கை 95,176 இலிருந்து 93,167 ஆகக் குறைந்துள்ளது (சுமார் 2.1 வீத வீழ்ச்சி).

மட்டக்களப்பு மாவட்டம்: 117,514 இலிருந்து 117,172 ஆக மாணவர் எண்ணிக்கை மிகச் சிறிய அளவில் குறைந்துள்ளது.

திருகோணமலை மாவட்டம்: 93,482 இலிருந்து 93,481 ஆக மாணவர் எண்ணிக்கை ஏறத்தாழ நிலையாக உள்ளது. (அ)

## தெங்கு ஏற்றுமதித்துறை மூலம் 1.2 பில்லியன் டொலர் வருமானம்

கொழும்பு, பெப். 06

இலங்கையின் தெங்கு ஏற்றுமதித்துறை, கடந்த ஆண்டில் 1.2 பில்லியன் டொலர் வருமானத்தைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

இது 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 43 வீத வளர்ச்சியாகும் என இலங்கை தென்னை கைத்தொழில் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இலங்கை தென்னை கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் ஜயந்த சமரக்கோன் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

தேங்காய்ப் பால், தேங்காய் கிரீம் மற்றும் தேங்காய் எண்ணெய் ஆகியவற்றிற்கு சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள பெரும் கேள்வியே இந்த வளர்ச்சிக்குக் காரணமாகுமென அவர் குறிப்பிட்டார். (அ)

## யுத்த வெற்றியை அநுர சிறுமைப்படுத்துகிறார்!

### சுதந்திரக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 06

நாட்டின் அனைத்து அபிவிருத்திப் பணிகளும் கடன் மூலமே முன்னெடுக்கப்படும் நிலையில், கடந்த காலங்களில் கடன் பெற்று வாங்கப்பட்ட ஆயுதங்களைக் காட்சிப்படுத்துவதில் எவ்வித தவறும் இல்லை எனவும், அதனைத் தவிர்ப்பதன் மூலம் அரசாங்கம் பாரிய உயிர்த்தியாகத்தால் ஈட்டப்பட்ட யுத்த வெற்றியை சிறுமைப்படுத்துவதாகவும் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள சுதந்திர கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுதந்திர தின அணிவகுப்பின்போது இராணுவப் படைப்பிரிவுகளை முறையாக அறிமுகப்படுத்தும் மரபு இம்முறை மீறப்பட்டுள்ளதுர்.

ஜனாதிபதி அருகில் கடந்து செல்லும்போது ஒவ்வொரு இராணுவப் பிரிவின்விசித்திரங்கள் மற்றும் சாதனைகள் வழக்கமாகச் சொல்லப்படும். ஆனால் இம்முறை அத்தகைய கௌரவம் வழங்கப்படாமல் "டித்வா" சூறாவளி பற்றி மட்டுமே பேசப்பட்டது - என்றார். (அ)

## தேசிய மக்கள் சக்தி அரசை எளிதில் வீழ்த்திவிடமுடியாது!

கொழும்பு, பெப். 06

"159 ஆசனங்களை வைத்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அவ்வளவு எளிதில் வீழ்த்திவிட முடியாது." என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

"மாங்காய் மரத்துக்கு கல் அடிப்பதுபோல ஆட்சியை கவிழ்த்துவிட முடியாது.

ஆளுங்கட்சி வசம் 159 ஆசனங்கள் உள்ளன. இதனை பயன்படுத்தி தன்னை வலுப்படுத்திக்கொண்டு முன்னோக்கி செல்வதற்கே அரசாங்கம் முற்படும். மறுபுறத்தில் எதிரணிகள் தமது கருத்துகளை முன்வைக்கும்.

எனவே, ஆட்சி கவிழ்ப்பு தொடர்பில் கதைக்கப்பட்டாலும் யதார்த்தத்தை புரிந்துகொள்ளவேண்டும்.

கல்வி மறுசீரமைப்பு எனது ஆட்சிகாலத்தில்தான் ஆரம்பமானது. நாட்டுக்கு பொருத்தமான கல்வி மறுசீரமைப்பு அவசியம். கல்வியில் அரசியலை திணிக்க கூடாது. கல்வி மறுசீரமைப்பென்பது பொறுப்புடன் செய்ய வேண்டிய விடயமாகும்."-எனவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.